# இயல் 2 - கல்வியே தெய்வம்

பாடம் : தமிழ்

வகுப்பு : 5

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1 கசடற - இச்சொல்லின் பொருள் ..................................................

அ) தவறான ஆ) குற்றம் நீங்க இ) குற்றமுடன் ஈ) தெளிவின்றி

2 வளமதை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

அ) வள + மதை ஆ) வளமை + அதை இ) வளம் + அதை ஈ) வளம் + மதை

3. வெளிச்சம்- இச்சொல்லின் எதிர்ச்சொல் ....................................

அ) இருட்டு ஆ) வெளிப்படையான இ) வெளியில் ஈ) பகல்

## ஆ. ஒன்றுபோல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக.

முதலெழுத்து இரண்டாமெழுத்து

அன்னையும் நன்மையும்

| முதலெழுத்து | | இரண்டாம் எழுத்து |
|---|---|---|
| 1.அன்னையும் | அறிந்திட | 1. நன்மையும் |
| 2.வல்லமை | வளமதை | அன்னையும் |
| 3. கருத்தினில் | கணக்கென | 2. கல்வியை |
| 4. நன்மையும் | நயமதும் | வல்லமை |
| 5. வெற்றிகள் | வெளிச்சமும் | 3.கற்றிட |
| 6. கல்வியை | கசடற ம் | வெற்றிகள் |
| 7. விண்ணையும் | விடியலாய் | |

## இ. எதிர்ச்சொல் எழுதுக.

1. நன்மை x தீமை
2. புகழ் x இகழ்
3. வெற்றி x தோல்வி
4. வெளிச்சம் x இருட்டு
5. தோன்றும் x மறையும்

## ஈ. “உம்“ என முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

1. அன்னையும் தந்தையும்

அன்னையும் தந்தையும்

கண்ணெனும் கல்வியும

பொன்னையும் மண்ணையும்
நன்மையும் மென்மையும்.

**உ. வினாக்களுக்கு விடையளிக்க .**

**1. பொன்னையும் மண்ணையும்விடச் சிறந்தது எது?**

பொன்னையும் மண்ணையும் விடச் சிறந்தது கல்வி.

**2. கல்வியை எவ்வாறு கற்கவேண்டும்?**

கல்வியைக் குற்றம் நீங்கக் கற்க வேண்டும்.

**ஊ. சிந்தனை வினா**

**1. கல்வியோடு நற்பண்புகளும் அமைவதுதான் சிறப்பு என்று கூறுகிறார்களே , இதுபற்றி உங்கள் கருத்து என்ன ?**

(i) கல்வியோடு நற்பண்புகள் அமைவதுதான் சிறப்பு என்று கூறுவது சரியே.

(ii) நற்பண்பு என்பது பல செயல்களின் கூட்டமைப்பே ஆகும். கருணை, நாணயம், நேர்மை, கவனமாகச் செயல்படுதல், எடுத்த காரியத்தில் உறுதியாக இருத்தல் ஆகியவை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியவை ஆகும்.

(iii) கல்வி ஒருவருக்கு நல்ல வேலையைக் கொடுத்து செல்வந்தனாக்கும் ஆனால் செல்வத்தை அவன் நல்ல வழியில் செலவு செய்தால் மட்டுமே அச்செல்வத்தினாலும் கற்ற கல்வியினாலும் அவனுக்குப் பயன் கிடைக்கும்.

(iv) தற்காலத்தில் மாணவர்கள் புற உலகைப் பார்த்து தங்களைச் சீரழித்துக் கொள்கிறார்கள்.அப்போது அவன் கற்ற கல்வியினால் பயன் இல்லாமல் போய்விடும் எனவே,கல்வியோடு நற்பண்புகள் ஒரு சேர அமைய வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

## உரைநடை - நீதியை நிலைநாட்டிய சிலம்பு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1 புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் ___________

அ) மனுநீதிச்சோழன் ஆ) பாண்டியன் **இ) சிபி மன்னன்** ஈ) அதியமான்

2 கண்ணகியின் சிலம்பு ___________ ஆல் ஆனது

அ) முத்து **ஆ) மாணிக்கம்** இ) பவளம் ஈ) மரகதம்

3 அறநெறி - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________

அ) அறி + நெறி ஆ) அற + நெறி **இ) அறம் + நெறி** ஈ) அறு + நெறி

4 கால் + சிலம்பு - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________

**அ) காற்சிலம்பு** ஆ) கால்சிலம்பு இ)கற்சிலம்பு ஈ) கல்சிலம்பு

5 தண்டித்தல்-இச்சொல்லின் பொருள் ___________

அ) புகழ்தல் ஆ) நடித்தல் இ) வழங்குதல் **ஈ) ஒறுத்தல்**

**ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக**

1. அ + ஊர் = அவ்வூர்
2. தகுதி + உடைய = தகுதியுடைய

**இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக**

1. கள்வனல்லன் = கள்வன் + அல்லன்
2. செங்கோல் = செம்மை + கோல்

**ஈ. வினாக்களுக்கு விடையளிக்க .**

**1. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?**

கண்ணகியின் கணவனான கோவலன் பாண்டிய மன்னனால் தவறான தீர்ப்பளிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இதுவே கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் ஆகும்.

**2. புகார் நகரின் சிறப்புகள் யாவை ?**

ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னனும், பசுவிற்கு நீதி வழங்குவதற்காக, தன் மகனைத் தேர்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த சிறப்புக்குரியது புகார் நகரம்.

**3. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடை வீழக்காரணமென்ன ?**

பொற்கொல்லன் கூறியதைக் கேட்டு ஆராயாமல் கோவலனுக்குத் தண்டனை அளித்தான் பாண்டிய மன்னன். ஆதலால் அவனுடைய வெண்கொற்றக்குடை வீழ்ந்தது.

**உ. சிந்தனை வினாக்கள்**

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு - இந்தக் குறள் கருத்து யாருக்குப் பொருந்தும்? கண்ணகிக்கா ? பாண்டிய மன்னருக்கா ? சிந்தித்து விடை தருக.**

இந்தக் குறள் பாண்டிய மன்னருக்குப் பொருந்தும்.
பாண்டிய மன்னன் பொற்கொல்லன் கூறிய பொய்யை உண்மை என நம்பி ஆராய்ந்து முடிவெடுக்கவில்லை. பிறர் சொல் கேட்டுப் பிழை செய்து விட்டான்.

ஆட்சிப் பொறுப்பில் மன்னன் இருதரப்பினரின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். தீர விசாரிக்காமல் தீர்ப்பளித்துவிட்டான். ஆகையால் இக்குறள் பாண்டிய மன்னருக்கே பொருந்தும்.

## துணைப்பாடம் - காணாமல் போன பணப்பை

**அ. வினாக்களுக்கு விடையளிக்க .**

**1. பணப்பையைப் பெற்றுக் கொண்ட வணிகன் என்ன கூறினான்?**

வணிகன், பணப்பையைப் பெற்றுக் கொண்டு “என் பையில் அதிகப் பணம் இருந்தது. இப்போது பணம் குறைகிறது” என்று பொய் சொன்னான்.

**2. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதி என்ன ?**

இக்கதையின் மூலம் நான் அறியும் நீதி - ‘நேர்மை நன்மை தரும்.

**3. இக்கைதயில் நீ விரும்பிய கதை மாந்தர் யார்? அவரைப் பற்றி ஐந்து வரிகளில் எழுதுக.**

- இக்கதையில் நான் விரும்பிய கதைமாந்தர் மூதாட்டி.
- மூதாட்டி நினைத்திருந்தால் அப்பணப்பையை அவளே எடுத்துக் கொண்டிருக்கலாம்.
  ஆனால் நேர்மையாக சிற்றரசரிடம் ஒப்படைத்துள்ளார்.
- அம்மூதாட்டியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசுதான் அப்பணப்பை.
- இச்செயலால் எனக்கு இம்மூதாட்டியைப் பிடிக்கும்

**ஆ. சிந்தனை வினா**

**1. நீங்கள் அரசராக இருந்தால் , இந்தச் சிக்கலுக்கு என்ன முடிவெடுப்பீர்கள் ?**

நான் அரசராக இருந்தால் அவர் செய்தபடியே அப்பணத்தை மூதாட்டியிடம் ஒப்படைத்து விடுவேன். மேலும், அவ்வணிகரை ஒரு மாதத்திற்கு அரண்மனையிலும் அரசாங்க நிலத்திலும் ஊதியமின்றிப் பணி செய்ய வேண்டும் என கட்டளையிடுவேன்.

## கற்கண்டு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக**

1. சாலையில் பள்ளம் இருந்ததால், --------- பேருந்தை மெதுவாக ஓட்டிச்சென்றார்.
   **அ) ஓட்டுநர்** ஆ) ஓட்டுனர் இ) ஓட்டுணர்

2 கடவுருக்குச் செல்ல எந்த ---------ப் போக வேண்டும்?
   அ) வலியாக ஆ) வளியாக **இ) வழியாக**

3. கூண்டிலிருந்த --------- யைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டான் எழிலன்.
   அ) கிலி **ஆ) கிளி** இ) கிழி

4 நீரில் துள்ளி விளையாடுகிறது --------- மீன்
   **அ) வாளை** ஆ) வாலை இ) வாழை

5 தாய்ப்பசு இல்லாமையால் நாளடைவில் கன்று -------- ப் போனது.
   அ) இழைத்து **ஆ) இளைத்து** இ) இலைத்து

6.கடல்------- யில் கால் நனைத்து மகிழ்வது அனை வருக்குமே பிடிக்கும்.
   அ) அளை ஆ) அழை **இ) அலை**

**ஆ. பொருத்தமான சொல்லை நிரப்பித் தொடர்களைப் படித்துக்காட்டுக.**

1. நடனம் என்பது, ஒரு **கலை** ( களை / கலை / கழை )
2. சோளம் என்பது, ஒரு **தினை** (தினை / திணை )
3. பெட்ரோல் என்பது, ஓர் **எரிபொருள்** (எரிபொருள்/ எறிபொருள்)
4. ஒட்டகம் என்பது ஒரு **விலங்கு** (விளங்கு/ விலங்கு)
5. தென்னை என்பது, ஒரு **மரம்** (மறம்/ மரம்)

**இ. விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை எழுதுக.**

1. ஆற்றின் ஓரம் **கரை**. ஆடையில் இருப்பது **கறை**.
2. மடியைக் குறிப்பது **குறங்கு** மரத்தில் தாவுவது **குரங்கு**

3. பரந்து இருப்பது <u>பரவை</u> பறந்து செல்வது <u>பறந்து</u>.

4. மரத்தை அறுப்பது <u>அரம்</u>. மனிதர் செய்வது <u>அறம்</u>.

5. சுவரில் அடிப்பது <u>ஆணி</u>. மாதத்தில் ஒன்று <u>ஆனி</u>.

## மொழியை ஆள்வோம்

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. ஆயிரம் - தற்பொழுதுஆயிரம்ரூபாய்நோட்டு வழக்கத்தில் இல்லை.
2. உண்மை - நாம் எப்போதும் உண்மையைப் பேச வேண்டும்.
3. புகார்நகரம் - கண்ணகி புகார் நகரில் வாழ்ந்தவள்.
4. ஆடுகள் - ஆடுகள் மந்தை மந்தையாய் செல்கின்றன.

**3. கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக**

கல்வி கண் போன்றது
நீதி தவறாதவன் அரசன்
சிலம்பின் பரல் முத்துகளால் ஆனது
ஏழைக் கிழவி பணப்பையுடன் வந்தாள்
தீங்கு செய்தால் தீமை விளையும்

**1. தீங்கு செய்தால் என்ன நேரிடும்?**
தீங்கு செய்தால் தீமை விளையும்.

**2. சிலம்பின் பரல் எவற்றால் ஆனது?**
சிலம்பின் பரல் முத்துகளால் ஆனது.

**3. கல்வி எதனைப் போன்றது?**
கல்வி கண் போன்றது.

**4. நீதி தவறாதவன் யார்?**
நீதி தவறாதவன் அரசன்.

**5. பணப்பையுடன் வந்தது யார்?**
ஏழைக்கிழவி பணப்பையுடன் வந்தாள்.

**4. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

புறநானூறு என்னும் நூலில் அறப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அரசன் ஒருவன் மற்றொரு நாட்டு அரசன்மீது போர் தொடுக்கும் முன்பு, பசுக்களையும், அறவோரையும், பெண்களையும், பிணியாளர்களையும் போர் நிகழும் இடத்தைவிட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இச்செய்தி முதுகுடுமிப்பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்னும் புலவர் பாராட்டுகிறார். மேலும், படையெடுத்து வரும் பகைவன் மீது, மறைந்து நின்று, அம்பு எய்தும் நிலையங்கள் ஞாயில்கள்' என்று அழைக்கப்பட்டன.

**1. உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் யாது?**
உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் புறநானூறு.

**2. நெட்டிமையாரால் பாராட்டப்படும் அரசர் யார்?**
நெட்டிமையாரால் பாராட்டப்படும் அரசர் முதுகுடுமிப் பெருவழுதி ஆவார்.

**3. 'ஞாயில்கள் ' என்றால் என்ன ?**

படையெடுத்து வரும் பகைவன் மீது மறைந்து நின்று, அம்பு எய்தும் நிலையங்கள் 'ஞாயில்கள்' என்று அழைக்கப்பட்டன.

**4. பகைவன் - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்.**

பகைவன் இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் - நண்பன்.

**5. 'பிணி' என்பதன் பொருள்**

'பிணி' என்பதன் பொருள் - நோய்.

**5. பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க.**

துள்ளி குதிக்கும் மீன் **கடலிலே**
வெள்ளியை வானத்தில் **பார்த்தேன்**
**மீனவன்** வலை போட்டானே
**வலையில்** சிக்கிய மீனுமே
வெளியேற முயற்சி **செய்ததே**
நண்டு நண்பன் வந்ததே
வலையை வெட்டி **விட்டதே**
மீன் நன்றி **சொல்லி** சென்றதே.

## மொழியோடு விளையாடு

**1. பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| 1. அன்னையும் | அறிந்திட |
| 2. வல்லமை | வளமதை |
| 3. கண்ணெனும் | கற்றிட |
| 4. கருத்தினில் | கணக்கென |
| 5. நன்மையும் | நயமதும் |
| 6. வெற்றிகள் | வெளிச்சமும் |
| 7. கல்வியை | கசடற |
| 8. விண்ணையும் | விடியலாய் |

**2. ஒரு சொல்லில் இரு தொடரை உருவாக்குவோம்.**

**1. திங்கள் வாரத்தின் இரண்டாம் நாள்**

பௌர்ணமி அன்று வானில் முழு திங்களைப் பார்த்தேன்.

**2. ஞாயிறு கிழக்கே உதிக்கும்**

வாரத்தின் முதல் நாள் ஞாயிறு.

**3. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் எழுதுக.**

**1. கல்விக் கண் திறந்தவர் போற்றப்படுகிறார் எனக் காமராசர்.**

கல்விக்கண் திறந்தவர் எனக் காமராசர் போற்றப்படுகிறார்.

ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KNOWLEDGE IS POWER

2. **கற்றிட வேண்டும் கல்வியைக் கசடறக்:**

கல்வியைக் கசடறக் கற்றிட வேண்டும்.

3. **மனுநீதிச் சோழன் மன்னர் சோழமன்னர்களுள் புகழ்வாய்ந்த**

சோழ மன்னர்களுள் புகழ் வாய்ந்த மன்னர் மனுநீதிச் சோழன்.

4. **காற்சிலம்பு உடையது கண்ணகியின் மாணிக்கப்பரல்கள்**

கண்ணகியின் காற்சிலம்பு மாணிக்கப்பரல்கள் உடையது.

5. **தந்தையும் தெய்வம் அன்னையும்**

அன்னையும் தந்தையும் தெய்வம்.

## 4. சொல்லிருந்து புதிய சொல் உருவாக்கலாமா?




நெல்
வயல்

நெல் வயல்




விண்
கல்

விண்கல்





வலை
மீன்

வலைமீன்




பலா
மரம்

பலாமரம்




மண்
பானை

மண்பானை